விலை: 50.00
பக்கங்கள் : 15
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சா்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= வரை

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 198 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 20 புதன்கிழமை (05.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தொல்பொருள் அனுமதியுடனே குருந்தூரில் கட்டுமானம்

### நீதவானிடம் சட்டத்தரணி சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடனேயே குருந்தூர்மலையில் பௌத்தலோக நற்பணிமன்றம் கல்வெட்டை நிறுவியதாக பௌத்தலோக நற்பணி மன்றம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

எனவே அவ்வாறு கல்வெட்டு அமைக்கப்பட்ட செயற்பாடு சட்டவிரோதமான செயற்பாடு அல்லவெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

02

## கடன் மறுசீரமைப்பை எதிர்ப்பவர்கள் அதற்கான தீர்வை முன்வையுங்கள்

### வஜிர அபேவர்த்தன



(கொழும்பு)

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை எதிர்ப்பவர்கள் அதற்கான தீர்வை முன்வைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கு பாராளுமன்றத்தின் அனு

15

# குருந்தூரில் சட்டவிரோத விகாரை கட்டுமானம்

- நேரில் ஆய்வு செய்த நீதவான்
- பொலிஸ் மற்றும் தொல்பொருள் திணைக் களத்தை எழுத்துமூலம் அறிக்கையிட உத்தரவு.



முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில், மேலதிகமாக தொடர்ந்தும் மேம்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றதா, என்பது தொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா குருந்தூர்மலைக்கு நேற்று களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அத்தோடு குறித்த

15

### 204 ரூபாயினால்

## லிட்ரோ எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டது

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயுவின் 12.5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 204 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 83 ரூபாயினாலும் 2.3 கிலோ

15

### சமையல் எரிவாயு விலை குறைப்பு

## உணவுகளின் விலை குறைவடைகின்றது?

(கொழும்பு)

சமையல் எரிவாயு விலை குறைப்புடன், உணவகங்களின் உணவு விலையும் குறைக்கப்பட வேண்டும் என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, எரிவாயு விலைக்கு ஏற்ப உணவுகளின் விலை குறைக்கப்படுவது குறித்து இன்று அறிவிக்கப்படும் என உணவக

15



## சர்வதேசத்துக்கு அடிபணிய மாட்டோம்

### வெளிவிவகார அமைச்சர்

3 ஆம் பக்கம் பார்க்க

## கடன் மறுசீரமைப்பு வர்த்தமானி வெளியானது

3 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் டெங்கு தாக்கம் அதிகரிப்பு

6 ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்ற விசாரணையில் அரசியல்வாதிகள் தலையிட முடியாது

### குருந்தூர்மலையில் சரத் வீரசேகரவை எச்சரித்த நீதவான்



(முல்லைத்தீவு)

நீதிமன்ற விசாரணையில் அரசியல்வாதிகள் தலையிட முடியாது என குருந்தூர்மலையில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீர

15

### எதிர்வரும் 14ஆம் திகதி

## குருந்தூர் ஆதிசிவனுக்கு பாரிய பொங்கல்

(முல்லைத்தீவு)

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி பாரிய பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளது.

குருந்தூர்மலை விவ... காரத்தில் ஆதிசிவன் ஐயனார் ஆலய வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், ஏற்கெனவே நீதிமன்ற கட்டளையின்படி சைவ வழிபாடுகள் மேற்கொள்ள...

15

## யாழில் ஆட்டோக்களுக்கு இனி கட்டணமானி

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஓகஸ்ட் முதலாம் திகதிக்குள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணமானி பொருத்தும் நடவடிக்கை முடிவுறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தில் நேற்று இடம்பெற்ற

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16199)

076 825 7716 (ஆகாஸ்)

## தொல்பொருள்...

இந்த இடத்தில் புனரமைப்பு விடயங்களை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களம், தொல்பொருள் சட்டங்களின் கீழ் இந்த விடயங்களை மேற்கொண்டுள்ளது.

தொல்பொருள் சட்டத்தின் விதிமுறைகளை மீறிச் செயற்பட்டிருந்தால் இவற்றை அகற்றுவதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரமிருக்கின்றது.

இந்த பெயர்ப்பலகை விடயம் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால சந்ததியினருக்கு இங்கு இடம்பெற்றுள்ள புனரமைப்புக்களை மேற்கொண்டவர்கள் யாரெனத் தெரியவேண்டும். அதனால்தான் இந்த பெயர்ப்பலகை முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்தவிடயத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள எந்த இனத்தவர்களுக்கும் எவ்விதமான பாதிப்புக்களும் இழைக்கப்படவில்லை.

தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றே பௌத்தலோக நற்பணிமன்றம் இந்த பெயர்ப்பலகையை அமை த்தது.

எனவே இந்த பெயர்ப்பலகை அமைக்கப்பட்டது சட்டவிரோதமான செயற்பாடு அல்ல என்றார். (ம-7)

## யாழில்...

கலந்துரையாடலின் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போது சங்கத்தின் செயலாளர் இதனை தெரிவித்தார்.

"தற்பொழுதுள்ள பொருளாதார நிலைமையினால் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய நாங்கள் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணமானி பொருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏகமனதாக தீர்மானித்துள்ளோம்" என செயலாளர் தெரிவித்தார். (ம-7)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## பழைய மாணவர்களுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கம் என்ற பெயரில் 29.06.2023 ஞாயிற்றுக்கிழமை வலம்புரி பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறும் என பழைய மாணவர்களிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள விஷேட பொதுகூட்டத்திற்கும் மத்திய கல்லூரி நிர்வாகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

இலங்கை ஜனநாயகக்குடியரசின் கல்வி அமைச்சின் பழைய மாணவர் சங்கம் தொடர்பான 2008/41 இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக அதிபர் தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மிக விரைவாக பழைய மாணவர்களிற்கான பொதுக்கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டு பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக தெரிவு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன். பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் பற்றுறுதி கொண்ட பழைய மாணவர்களிற்கு தெளிவான தகவல்களை வழங்கும் நோக்கில் இவ்வறிவித்தல் வழங்கப்படுகிறது.

அதிபர்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(C-6866)

## ரிக்கட் விற்பனையாளர் தேவை

தேசிய அபிவிருத்தி ரிக்கட் விற்பனை கூட்டில் ரிக்கட் விற்பனை செய்ய பின்வரும் இடங்களிற்கு விற்பனை யாளர்கள் தேவை.

தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம், கோண்டாவில் (16197)

077 122 8841, 075 881 0010

# பதவி வெற்றிடம்

☞ விடுதிச்சாலை மேற்பார்வையாளர் (பெண்)
☞ விடுதிச்சாலை உதவி மேற்பார்வையாளர் (பெண்)

பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.
கல்வித் தகைமையும் பிற தகைமையும் கருத்திற் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி -10.07.2023

தலைவர்
துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பளை
(C-6868)

021 321 3151

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில்
38 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- நவக்கிரி மாணிக்க பிள்ளையார் கோயில் வீதியில்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- 3 வருடங்கள் பூர்த்தி அடைந்த தென்னைகள் உள்ளன.
- நிலாவரை வற்றாக்கிணற்றில் இருந்து 1 km தூரம்
- 1 பரப்பின் விலை 1200000 (பன்னிரண்டு இலட்சம்)

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு: ஜெயம் (16198)

077 814 7389, 077 986 5457

# நினைவு நாள் ஆண்டு 8



அமரர்
## பத்மநாதன் பாவலன்

மலர்ந்தது : 21.01.1991
மறைந்தது : 05.07.2015
திதி : 06.07.2023

எம்மை விட்டு நீ சென்று
எட்டாத தூரமதில்,
எண்ணமெல்லாம்
நீதானே எங்களுக்கு
எஞ்சியுள்ள காலம்
வரை உன் அன்பு நினைவுடனே
வாழும் உன் குடும்பத்தினர்.

1ம் கட்டை,
பருத்தித்துறை.
(16186)

# கண்ணீர் அஞ்சலி



ஓய்வுநிலை விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரும், யாழ். மாவட்ட விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தின் முன்னாள் தலைவருமாகிய

அமரர்
## கந்தசாமி இளங்கோவன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விவாக, பிறப்பு, இறப்பு
பதிவாளர் சங்கத்தினர்
யாழ். மாவட்டம்.
(C-6865)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியாது

## வெளிவிவகார அமைச்சர் திட்டவட்டம்



(கொழும்பு)

**இலங்கையின் பொறுப்புக்கூறல் உள்ளக பொறிமுறைக்கமையவே முன்னெடுக்கப்படும். மாறாக எக்காரணத்துக்காகவும் சர்வதேச பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட மாட்டாது என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.**

நாட்டிலுள்ள 2 கோடி இலங்கை பிரஜைகளுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூறுமே, தவிர எந்த சந்தர்ப்பத்திலும் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியாது என்றும் அமைச்சர் அலிசப்ரி திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் கடந்த ஜூன் 19 ஆம் திகதி ஆரம்பமானது.

இதன் போது இலங்கை தொடர்பான அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல் நஷீப் முன்வைத்திருந் தார்.

குறித்த அறிக்கையில், "இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு தாமதிக்கும் பட்சத்தில், சர்வதேச விசாரணைப் பொறிமுறை உள்ளிட்ட வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியேற்படும்." என எச்சரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கையில் என்ன செய்ய முடியுமோ அதனை நாம் செய்வோம். இவ்விடயத்தில் சர்வதேச பொறிமுறைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால் இலங்கையிலுள்ள மக்கள் மத்தியில் மேலும் பிரிவினைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே பொறுப்புக்கூறல் விவகாரத்தில் வெளிநபர்களுக்கு பதிலளிக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது. மாறாக இலங்கைப் பிரஜைகளான 22 மில்லியன் மக்களுக்கே பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. இந்த நிலைப்பாட்டில் இலங்கை ஸ்திரமாகவுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் ஆளணிப் பற்றாக்குறை

### பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளிலே மொத்தமாக 8000 பேர் அனுமதிக்கப்பட்ட ஆளணியாக இருந்தாலும் சுமார் 2000 பேருக்கான ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. அதில் குறிப்பாக ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சுகாதார உதவியாளர்களாக காணப்படுகின்றார்கள்.

அதேபோல தாதியர்கள், மருத்துவமாதுக்கள் என பல் வேறுபட்ட நிலைகளிலும் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது.

தற்போதுள்ள நிலையில் புதிதாக உள்வாங்குவதில் தாமதம் காணப்படுகின்றபடியினால் எதிர்வரும் காலங்களில் சுகாதார அமைச்சின் ஊடாக இந்த நியமனங்கள் கிடைக்கப் பெறும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5-33)

# அஸ்தியை வைத்து செய்யப்படும் நகைகளுக்கு அதிக கேள்வி

(கொழும்பு)

இறந்தவர்களின் அஸ்தியை வைத்து இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் நகைகள் மூலம் வருடாந்தம் சுமார் பதினைந்து இலட்சம் டொலர் அந்நியச் செலாவணியை பெற்றுள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் இப்போதும் ஆர்.கே.எஸ். அஷ்மாவாஷே ஆபரண வடிவமைப்புகள் ஏற்றுமதி ஏஜென்சி மூலம் செய்யப்படுகின்றன.

இலங்கையில் இன்னும் இவ்வகை நகைகளை அணிவதில் விருப்பம் உள்ளவர்கள் இல்லை. ஆனால் ஐரோப்பா, ஜேர்மனி, மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் இந்த நகைகளுக்கு பெரும் கேள்வி ஏற்பட்டுள்ளது.

குறித்த பொருட்களை தயாரிப்பதற்கான அனைத்து வசதிகளையும் இலங்கை முதலீட்டுச் சபை ஏற்கனவே சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# நேபாளத்தின் முன்னாள் பிரதமர் மாதவ்குமார் இலங்கை விஜயம்

(கொழும்பு)

நேபாளத்தின் முன்னாள் பிரதமரும் தலைவருமான மாதவ்குமார் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே இலங்கை வந்துள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டதன் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் இலங்கை வந்துள்ளதாக நேபாள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையில்இருக்கும்போது முன்னாள் பிரதமர் தெற்காசிய கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட் டத்திலும் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை குறைக்க முடியாது- வெதுப்பக உரிமையாளர்கள்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டாலும் வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை குறைக்க முடியாது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செய்தியில் அந்த சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

முன்னதாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட நிலையில், வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை.

எனவே மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்டதனால், வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை குறைக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியானது

(கொழும்பு)

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் கீழ் பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் கீழ் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான பிரேரணை கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த பிரேரணை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய தேசிய கடன் மறுசீரமைப்புக்கான சகல நடவடிக்கைகளுக்கும் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், கடந்த திங்கட்கிழமை முதல் அமுலாகும் வகையில் ஜனாதிபதியால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மசகு எண்ணெய்யின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை நேற்று சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதன்படி, டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 70.84 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

எனினும், பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 74.65 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அத்துடன் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை, வீழ்ச்சியை பதிவு செய்து 2.69 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்லாந்தின் தலை நகரான டப்ளினில் இடம் பெற்ற கனசவா சர்வதேச கராத்தே சுற்றுப் போட் டியில் இலங்கை தமிழ ரான செல்வி.ரதினி ரஜினிகாந்த் வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

ஆறு வயது தொடக்கம் 9 வயது வரையான மகளிர்க்கான காட்டா போட்டியில் செல்வி. ரதினி ரஜினிகாந்த் வெண் கல பதக்கத்தை சுவீகரித்தார். அயர்லாந்து மற்றும் வட அயர்லாந்தை சேர்ந்த பெருமளவிலான வீர, வீராங்கனைகள் இந்த சுற்று போட்டிகளில் பங்கேற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.








மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் மன்னார் பிறிமியர் லீக் சுற்றுப் போட்டியின் 2 ஆவது சீசன் நேற்று முன்தினம் மாலை மின்னொளியில் ஆரம்பமானது. மன்னார் நகரத்தில் இருந்து 12 உதைபந்தாட்ட கழகங்களைச் சேர்ந்த 300 வீரர்கள், உரிமையாளர்கள், விருந்தினர்கள் ஊர்வலமாகச் சென்று மன்னார் பொது விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் வைக்கப்பட்டுள்ள தேசிய சாதனையாளர் அமரர் பியுசிலஸின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். முதல் போட்டியில் மன்னார் மாட்டிஸ் உதைபந்தாட்டக் கழகத்திற்கும் லக்கி உதைபந்தாட்டக் கழகத்துக்கும் இடம்பெற்ற போட்டியில் மாட்டிஸ் உதைபந்தாட்டக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (படங்கள்:-ஜோசப்நயன்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 260 | 200 | 320 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 600 | 700 |
| தக்காளி | 450 | 400 | 350 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 240 | 200 | 300 |
| கோவா | 320 | 300 | 300 | 300 |
| கரட் | 400 | 500 | 500 | 550 |
| பூசணி | 140 | 120 | 100 | 160 |
| புடோல் | 200 | 220 | 180 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 130 | 150 |
| பாகற்காய் | 600 | 400 | 400 | 700 |
| வெண்டக்காய் | 300 | 250 | 140 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 250 |
| பயற்றங்காய் | 450 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 420 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 420 | 300 | 400 | 500 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 200 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 500 | 800 |
| முள்ளங்கி | 160 | 120 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | -- | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2868

Search for people, places and things

### டிலான்

என்ன தல மின்சாரம் தாக்கின மாதிரி
உடம்பில இவ்வளவு காயம்...?




ஒரு சின்ன திருத்தம்... தாக்குனது
மின்சாரம் இல்ல... என் சம்சாரம்!

### சிறி

என் மகன் ரொம்ப புத்திசாலி
ஒரு தீப்பெட்டி வாங்கினா அதுல
ஐம்பது குச்சி இருக்கானு
எண்ணிப்பார்த்துதான் வாங்கிட்டு
வருவான்...

என் மகன் உங்க
மகனை விட புத்திசாலி
எல்லா குச்சியும் எரியுதான்னு
கொளுத்திப் பார்த்துட்டுத்தான்
வாங்கிட்டு வருவான்...

### புவிநிலா




### யசோபிகா

நம்மளா
இவ்வளவு
அழகா
இருக்கோம்...
எவன்
பார்த்த
வேலையடா
இது!



### டினு




அதென்ன மரியாதை இல்லாம தள்ளு, இழுன்னு....
தள்ளுங்க, இழுங்கன்னு சொல்லுங்கையா

### திவி

கணவன்:- கல்யாண நாள் அன்றைக்காவது
காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கலாமே...



மனைவி: சரி... சரி... சீக்கிரமா விழுங்க...
பியூட்டி பார்லர் போகனும் நேரமாச்சு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழல் அச்சில் இருந்து விலகும் பூமி

# ஆய்வில் வெளிவந்த அதிர்ச்சித் தகவல்

(வோஷிங்டன்)

**நிலத்தடி நீரை அதிகளவில் உறிஞ்சுவதன் காரணமாக பூமிச் சுழற்சியின் அச்சு, 1993 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 80 செ.மீ கிழக்கு நோக்கிச் சாய்ந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.**

இவ்விடயம் குறித்து, அமெரிக்கப் புவி இயற்பியல் சங்கத்தின் சஞ்சிகையில் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகளவில் நிலத்தடி நீரை உறிஞ்சுவதனால், பெரும் நீர் நிலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு, கடலின் மட்டத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாய்வின் தலைமை ஆய்வாளரான தென்கொரியாவின் சோல் தேசிய பல்கலைக்கழகத்தின் புவி அறிவியல் பேராசிரியரான கி-வெயான் சோ குறிப்பிடுகையில்,

"நிலத்தடியிலிருந்து உறிஞ்சி எடுக்கப்படும் நீர் காற்றில் ஆவியாகின்றது. அல்லது ஆறுகளில் சென்று கலக்கிறது. இம்முறையில், நீர் நிலத்தடியிலிருந்து கடல்களுக்கு இடம்பெயர்கிறது" எனத் தெரிவித்தார்.

மேலும், உலகின் வடமேற்கு அமெரிக்காவிலும் வடமேற்கு இந்தியாவிலுமே நிலத்தடி நீர் அதிகமாக உறிஞ்சப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலத்தடி நீரை உறிஞ்சுவதைக் குறைத்தால் இதைச் சரி செய்யலாம். ஆனால் அதற்கு பல பத்தாண்டுகளுக்கு நிலத்தடி நீர் எடுப்பதைக் குறைக்க வேண்டும்.

அத்துடன், கடும் வறட்சிக் காலங்களில் நிலத்தடி நீர் மேலும் உறிஞ்சப்படுவதனால், கடல்மட்டம் உயர்வதற்கும் வழிவகுக்கும் எனத் தெரிவித்தார். (நி)


## 1 ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்.
**நடராஜா பிரபாகரன்**

திதி: துதியை 05.07.2023

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1955.05.05 | 2022.07.15 |

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் யாழ்.நகரை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.நடராஜா பிரபாகரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுகள்.

ஆண்டொன்று ஆனதோ அப்பா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து...
புன்னகை பூத்த உங்கள் முகம் – என்றும்
எம் மனக்கண்ணில் நிழலாடும்

பாசமான வார்த்தைகள் –என்றும்
எம்மைப் பின்தொடரும்
பசுமையான உங்கள்நினைவுகள்–என்றும்
அழியாது எம்மை விட்டு...

உங்கள் நினைவுகளுடன்:
மனைவி-பி.சுசிலாதேவி
(முன்னாள் தாதிய உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலை),
பிள்ளைகள்- சுபீகரன், சுகந்தினி, கார்த்திகா,
மருமக்கள்- வானதி, றதீஷன், சிவநந்தவர்மன்
பேரப்பிள்ளைகள்.

1 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8755 (16133)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.
**நா.க.முருகையா**



ஆலமரம் சாய்ந்ததோ
அதன் நிழலில் நின்ற
ஜீவன்கள் எல்லாம் தன்னுயிர்
பிரிந்தது போல தவித்ததேனோ
உன் இதயம் தான் இங்கில்லை
ஆனால் உன் நினைவுகள்
இன்றும் எம் நெஞ்சில்
நீங்கா ஒளிவிளக்காய் மிளிர்கிறது

உங்கள் நினைவுகளுடன்
இரத்தினேஸ்வரி (மனைவி),
பிள்ளைகள்:- கஜன், வினோ,
மருமக்கள்:- வசந்தகுமார், விஜயமணி
பேரப்பிள்ளைகள்: லக்சனா, தனுஸ்கா, கபிலாஷ்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (16191)


## இராசிபலன்

05.07.2023
ஆனி 20, புதன்கிழமை
துதியை பிற்பகல் 1.22 மணிவரை
உத்தராடம் முற்பகல் 8.54 மணிவரை

சுபநேரம் -4.27-5.57 மணிவரை
இராகுகாலம்-11.57-1.27 மணிவரை
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்-
திருவாதிரை

வளவன்

**மேஷம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைய வேண்டிய நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள்.

**ரிஷபம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் வழியில் நன்மையுண்டு.

**சிம்மம்:** செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், உடல் நலனில் உற்சாகம் பிறக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** தொழில் ரீதியான அலைச்சல்கள் இடம்பெறலாம், உடல் நலனில் கவனம் தேவை, தேவையற்ற மனக் குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கன்னி:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மீனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகம்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் கடந்த ஆறு மாதங்களில் 1843 பேர் டெங்கு நோயாளிகளாக இனங்காணப் பட்டுள்ளனர். மேலும் இதுவரையில் தென்பகுதியில் இருந்து வந்த ஒருவர் மாத்திரம் டெங்கு நோய்த் தாக்கத்தினால் இறப்புக்கு உள்ளாகி இருக்கின்றார் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

வடக்கு மாகாண சுகாதார சேவை திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 1491 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 65 பேரும் மன்னார் மாவட்டத்தில் 77 பேரும் வவுனியா மாவட்டத்தில் 106 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 104 பேருமாக மொத்தமாக 1843 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது. யாழ்.நகரப் பகுதி, நல்லூர் கரவெட்டி பகுதிகளில் இந்த டெங்கு தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் இந்த டெங்கு தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது. எனவே டெங்கு தொற்றினை தவிர்ப்பதற்கு பொதுமக்கள் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருந்து பூரண ஒத்துழைப்பினை



வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5-6-33-104)

# கைதடியில் நன்னீர்த் தேக்கம்

## அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைதடிப் பிரதேசத்தில் நன்னீர்த் தேக்கம் அமைத்துத் தருமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கைதடி விவசாயிகள் கோரியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை குப்பிழான் பகுதியில் விவசாயிகளுக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலின் போதே கைதடி விவசாயிகள் மேற்படி கோரிக்கையை முன்வைத்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கைதடி கடலால் சூழப்பட்ட பிரதேசமாக காணப்படுவதால் நன்னீரத் தேக்கம் அமைத்து நீரை பாதுகாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

நன்னீரத் தேக்கம் அமைப்பதனூடாக கைதடி பிரதேச கிணற்று நீரை பாதுகாக்க முடிவதுடன் விவசாய தேவைகளுக்கான நீரையும் பெறக் கூடியதாக இருக்கும்.

கைதடியில் நன்னீர தேக்கம் அமைக்கும் திட்டம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அத்துடன் கைதடியில் வயல் நிலங்களில் சிறுதானிய செய்கையை மேற்கொள்ள கால் நடைகள் பாரிய சவால்களை ஏற்படுத்துகின்றன.

எனவே நெல் அறுவடையின் பின்னர் வயல் நிலங்களில் சிறுதானிய பயிர்ச் செய்கை மேற்கொள்ள ஏதுவாக வயல் நிலங்களை சுற்றி முட்கம்பி வேலிகளை அமைக்க வேண்டிய தேவைப்பாடு நிலவுவதாகவும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (நி-5-6-30)

# புத்தூர் தாக்குதல் சம்பவம்; அதிகரிக்கும் கைதுவேட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் வீடுகளுக்குள் புகுந்து இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தி சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இதுவரையில் 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கடந்த 29ஆம் திகதி 25 பெண்கள் உட்பட 31 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 25 பெண்களும் பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம் ஏனைய 6 ஆண்களையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வரும் அச்சுவேலி பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை மூவரை கைது செய்திருந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 24 பேரை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இதுவரை 58 பேரை கைது செய்துள்ளனர். (நி-6-33)

# மானிப்பாயில் வெடிபொருட்கள் மீட்பு

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உயரப்புலம், அடைக்கலநாயகி தெருவில் உள்ள காணியில் இருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணியின் உரிமையாளர் தனது காணியில் நேற்று குழி வெட்டிய போது ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் இருந்ததை அவதானித்த நிலையில் அவர் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

அதனடிப்படையில் அங்கு பொலிஸார் சோதனையிட்ட போது 4 ரி-56 ரக ஆயுதங்கள், தோட்டாக்கள், 9 ரி-56 ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

குறித்த ஆயுதங்களையும் தோட்டாக்களையும் மீட்ட மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-104)



அச்சுவேலி பத்தமேனி மிட்டிலாங்கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பக்தி பூர்வமான தேர்த் திருவிழா இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# கோண்டாவில் மஹாகணபதி காளி கோவில் மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் கந்தர் வளவு ஸ்ரீமஹா கணபதி பிள்ளையார் கோவில் காளி கோவில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெளிக்கிழமை காலை 8.43 மணி தொடக்கம் முற்பகல் 10.25 வரையுள்ள சுபவேளையில் இடம் பெறவுள்ளது. இதனை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும். (நி-5-6)




## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)

40, முனிஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

Reg No: 9583 TP: 021 221 4460

*04.07.2023* அன்று முச்சக்கர வண்டிகளிற்கான கட்டண மீற்றர் பொருத்துதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று முச்சக்கரவண்டிச் சங்கத்தில் நடைபெற்றது. இதில் முச்சக்கரவண்டிச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிகள் அனைத்தும் கட்டண மீற்றர் பொருத்திய பின்னரே சேவையில் ஈடுபட முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டது. எனவே எதிர்வரும் *01.08.2023* ஆம் திகதிக்கு முன்னர் மீற்றர்களைப் பொருத்த வேண்டும் என அனைத்து முச்சக்கரவண்டிச் சாரதிகளிற்கும் அறியத்தருகின்றோம்.

அனைவரும் இதனைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-6864) **செயலாளர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதப் புதைகுழிகளை மூடி மறைக்க

# தொல்லியல் திணைக்களம் காணிகளை கையகப்படுத்துகிறதா?

### மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கேள்வி

**(கொழும்பு)**

**கொக்குதொடுவாய் போன்று வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள எண்ணிலடங்காத மனிதப் புதைகுழிகளை மூடி மறைப்பதற்காகத்தான் அங்குள்ள பெருமளவான நிலங்களை தொல்லியல் திணைக்களம் தம்வசப்படுத்தியிருக்கின்றதா? என்று மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குதொடுவாய் பகுதியில் தண்ணீர் குழாய்களைப் பொருத்துவதற்காகக் கடந்த மாதம் 29 ஆம் திகதி நிலத்தைத் தோண்டிய போது மனித எச்சங்கள் மற்றும் ஆடைகள் என்பன தென்பட்டதை அடுத்து, அப்பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

அதனைத்தொடர்ந்து கடந்த 30 ஆம் திகதியன்று அவ்விடத்தைப் பார்வையிட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிவான், அங்கு (நாளை) 6 ஆம் திகதி அகழ்வுப்பணிகளை ஆரம்பிக்குமாறும் அது வரையில் அப்பகுதியிலுள்ள மனித எச்சங்கள் சிதைவுறாத வண்ணம் பாதுகாக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அண்மையில் 4 சர்வதேச அமைப்புக்கள் ஒன்றிணைந்து "இலங்கையிலுள்ள பாரிய மனிதப் புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வுப் பணிகளும்" என்ற தலைப்பில் நாடளாவிய ரீதியில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் அவற்றின் அதிர்ச்சியளிக்கும் பின்னணி குறித்த அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தன.

அவ்வறிக்கை மிகமுக்கிய பேசுபொருளாக மாறியிருந்த பின்னணியில், இறுதியுத்தம் இடம்பெற்ற மாவட்டமான முல்லைத்தீவின் கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளமையானது, அதுவும் ஓர் மனிதப் புதைகுழியாக இருக்கக்கூடுமோ என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

அதேவேளை இவ்வாறான எண்ணிலடங்காத மனிதப் புதைகுழிகளை மூடிமறைப்பதற்காகத்தான் தொல்லியல் திணைக்களம் வட, கிழக்கு மாகாணங்களில் பெருமளவான நிலங்களைத் தம் வசப்படுத்தியிருக்கின்றதா? என்று கேள்வி எழுப்பியுள்ள மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இவ்விடயம் தொடர்பில் உரியவாறான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளனர். (ந்-5)

# 250 மில்லியன் நிதியுதவி

### உலக வங்கியால் வழங்கி வைப்பு

(கொழும்பு)

உலக வங்கியின் 500 மில்லியன் டொலர் நிதியுதவியில் இருந்து இலங்கைக்கு 250 மில்லியன் டொலர்கள் முதலாவதாக வழங்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக வங்கியை மேற்கோளிட்டு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க டுவிட்டரில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி முக்கிய பொருளாதார சவால்களை எதிர்கொள்ளவும் நாட்டின் வளர்ச்சி இலக்குகளை ஆதரிக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந்)


**வேலையாட்கள் தேவை**

கொழும்பு வெள்ளவத்தை சலூன் ஒன்றுக்கு வேலை ஆட்கள் தேவை
சம்பளம் 100,000/= இற்கு மேல்

தொடர்புகளுக்கு
075 727 0809,
077 691 9403.
(ந்-2044)

# மணிவிழா வாழ்த்து



செல்வி. **மரிய லூமென் செல்வபிறேமா செபஸ்ரியாம்பிள்ளை**
SLTS-I பகுதித்தலைவர்
BSc, Maths Trd

சேவைக்காலம்
யா/சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
- 14.12.1987 -22.02.1989
யா/சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
- 23.02.1989-31.12.1989
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
- 01.01.1990-31.12.1991
யா/சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
-01.01.1992- 18.02.1992
யா/ இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
- 19.02.1992-25.04.2010
யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம்
- 26.04.2010-13.12.2022

Congratulations

திருமதி. **தேவ அருட்செல்வம் சுகிர்தராணி**
SLTS-I பகுதித்தலைவர்
Music Trd
சேவைக்காலம்
தி/படித்திடல் G.T.M.S
-02.05.1983-15.02.1984
தி/கோபாலபுரம் G.T.M.S
-16.02.1984-31.01.1986
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
- 01.02.1986-31.12.1987
தி/சாம்பல்தீவு மகா வித்தியாலயம்
-01.01.1988-31.01.1992
கிளி/சென் திரேசா மகளிர் கல்லூரி
-01.02.1992-31.01.1993
கிளி/ கனகாம்பிகை குளம் G.T.M.S
- 01.02.1993-14.05.1995
யா/ கைதடி நுணாவில் G.T.M.S
- 15.05.1995-24.05.1999
யா/ஏழாலை சைவ மகாஜனா G.T.M.S
- 25.05.1999-15.08.2001
மட்/கிரான் மகா வித்தியாலயம்
- 16.08.2001-31.12.2004
யா/குப்பிளான் மகா வித்தியாலயம்
- 01.01.2005-30.06.2007
யா/சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
-01.07.2007-31.12.2015
யா/ மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம்
-01.01.2016-31.01.2023



**மாணவர்களின் கல்விக் கண் திறந்திட அயராது உழைத்த ஆசிரியர்களின் அளப்பெரிய சேவையை உளமார வாழ்த்துகின்றோம்.**

(16144)

பாடசாலைச்சமூகம், யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 158

# மூளைதான் மூலதனம்

செத்த எலியை மூலதனமாக வைத்து ஒருவன் தலைவர் ஆன கதை.. ஒர் ஊர்ல ஒரு சோம்பேறி சுப்பன் இருந்தா னாம். எந்த வேலையும் செய்யாமல் தின்னுபுட்டு தின்னுபுட்டு கோயில்ல தூங்குவானாம்.

அம்மா, அப்பா இல்லாத அவன எடுத்து வளர்த்த பாட்டிக்கோ கோபம்னா கோபம். அவனக் கூப்பிட்டு "அடேய் பாவிப்பயல எனக்கு வயசாயிப் போச்சு உசிரு இன்னைக்கோ நாளைக்கோன்னு இருக்கு.

நீ இப்படியே சோம்பேறியா இருந்தா அப்புறம் எப்படிடா தின்ப. போடா ஏதாவது சம்பாதிக்கப் பாரு" என்று சண்டை போட, அவனோ "அய்யோ கிழவி அஞ்சு காசு கூடக் கையில இல்ல. நான் எப்படிச் சம்பாதிக்கிறது...?" என்று திருப்பிக் கேட்க, அவன் பாட்டியோ "அட மூளையில்லாத முட்டாப் பயலே மூளை இருக்கிறவனுக்குச் செத்த எலியும் மூலதனம்தானடா. போய்ப் பிழைச்சிக்கடா"என்று அவனை அடித்து விரட்டினாள்.

அவனோ "என்னடா பொல்லாத வாழ்க்க" ன்னு பாட்டு பாடிக்கிட்டே போன அவன் தெருவில் உள்ள குப்பைத் தொட்டியில் ஒரு செத்த எலியைக் கண்டான். அவனுக்குப் பாட்டி சொன்ன ஞாபகம் வந்தது. அந்த செத்த எலியை வாலைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு அப்படியே நடந்து போனான். களைப்படைந்த அவனோ அந்த செத்த எலியை ஒரு ஓரமாப் போட்டு விட்டு ஒரு மரத்தடியில் அமர்ந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது இரண்டு காக்கைகள் எங்கிருந்தோ ஓடி வந்து அந்தச் செத்த எலியை கொத்தித் தின்றது அடடா அந்த செத்த எலி யாரோ வீட்டில் விஷ எலி மருந்து வைத்து செத்த எலி போல அந்த செத்த எலியை தின்ன காக்கைகள் இரண்டும் உடனே செத்தன. அவனோ என்னடா இது வம்பாப் போச்சு என்று செத்த இரண்டு காக்கைகளையும் தூக்கிக் கொண்டு அந்தப் பாதையில் தன் பயணத்தைத் தொடர்ந்தான். அங்கே ஒரு வயதானவர் ரோட்டில் அவரது தோட்டத்தில் விளைந்த வேர்க்கடலையை வெயிலில் காய வைத்துக் கொண்டிருந்ததைக் கண்டான். அந்த வயோதிபரோ தம்பி உன் கையிலிருக்கும் இரண்டு காக்கைகளையும் என்னிடம் கொடு.

அவைகளை இந்தக் கடலை காயும் இடத்தில் வைத்தால் பயந்து கொண்டு எந்தக் காக்கைகளும் வராது உனக்கு வேணுமுனா கொஞ்சம் வேர்க்கடலை தருகிறேன் என்றார். அவனும் அந்த செத்தக் காக்கைகளைக் கொடுத்து விட்டுப் பச்சை வேர்க்கடலையை வாங்கிக்கொண்டு மீண்டும் ஊர் நோக்கி வந்தான்

அப்போது அங்கே கிடந்த உடைஞ்ச பானை ஒன்றை எடுத்து அதில் மணல் கொஞ்சம் போட்டு தீ மூட்டி அந்த வேர்க்கடலையை நன்றாக வறுத்தான் அந்த வறுத்த வேர்க்கடலையுடன் அவன் நடந்து வரும் போது அங்கே இரண்டு பேர் விறகு பிளந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கோ அடங்காப் பசி. அவனிடம் கேட்டு அந்த வேர்க்கடலையை வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக அவனுக்கு உடைத்த விறகு கட்டைகளைக் கொஞ்சம் கொடுத்தார்கள்.

அவனும் அந்த விறகு கட்டுடன் வீடு நோக்கி கடை வீதியில் வரும் போது அங்கே ஒரு ஹோட்டல்காரர் அவனிடம் அந்த விறகுகளை விலைக்கு கேட்டு வாங்கிக் கொண்டு அவனுக்கு நிறைய காசு கொடுத்தார். இப்படிக் காசு பார்த்த நம்ம சோம்பேறி சுப்பன் பணத்தின் அருமை தெரிந்து கொண்டு அந்தக் காசுக்கு மறுபடியும் நிறைய விறகுகள் வாங்குவதும் விற்பதுமாகத் தொடர்ந்து, பிறகு ஒர் அடை மழைக்காலத்தில் கொள்ளை இலாபம் சம்பாத்தித்து ஒரு மரக்கடை அதிபரானான் . மரக்கடை அதிபரான அவரோ நிறைய ஆட்களை வேலைக்கு வைத்து பக்கத்து மலையில் இருந்த மரங்களை எல்லாம் தன் மரக்கடையில் கட்டைகளாக அடுக்கி வைத்தான்.

அத்தோடு விட்டானா. அவ்வப்போது நடக்கும் அரசியல் கட்சி மீட்டிங்குகளுக்கு மேடை போடுவது, வழியெங்கும் கொடிகள் நாட்டுவது என்று ஆரம்பித்து இன்று பல கோடிகளுக்கு அதிபதியானான். இன்று அந்தக் கட்சியின் குட்டித் தலைவர்களுள் ஒருவராகி விட்டார். இப்போதும் அவர் பழைய பாசத்தை மறக்கவில்லை. காலையில் எழுந்ததும் அவர் விழிப்பது ஒரு செத்த எலியைப் பார்த்த படியே. அவர் எங்கே போனாலும் ஒரு செத்த எலியை பார்சல் செய்து யாருக்கும் தெரியாமல் மடியில் வைத்துக் கொள்வார்.

அவர் வந்தாலே செத்த எலி வாசம் அடிக்கும். ஆனாலும் அவரது அல்லக்கைகள் யாரும் அதைக் கண்டுகொள்வதில்லை. பதிலாக "அண்ணேன் இந்த செண்டு எங்கே அண்ணேன் வாங்கினீங்க..?

அடடடா...என்னா வாசன...! வாசனையோ வாசனை..! நல்லா கும்முன்னு இருக்கு தலைவா..!! என்று புகழ்வார்கள் எல்லாம் பணம் செய்யும் மாயமுங்கோ...!

# ஒரே குடும்பத்தைச் சே

# ஆற்றில் இழுத்துச் செல்ல

## 7 பேரின் சடலங்கள்

### ஆற்றில் நீராடிய வேளை மலேசிய

(மலேசியா)

**மலேசியாவில் ஆறு ஒன்றில் நீராடிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 7 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

தெரெங்கானு மாநிலத்தின் சுகாய் மாவட்டத்தில் காட்டுப்பகுதியிலுள்ள ஜேராம் மாவார் நீர்வீழ்ச்சிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் அதிகாரி இது தொடர்பாக கூறுகையில், இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஆற்றில் நீந்திக் கொண்டிருந்த போது, திடீரென ஆற்றுநீர் அளவு அதிகரித்ததால், இவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டிருக்கக் கூடும். நீர்மட்டம் 3 மீற்றர் அளவுக்கு வேகமாக அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் 4 முதல்

# நேட்டோ கூட்டமைப்பை பலப்படுத்த ஐரோப்பிய நாடுகளுக்கு பைடன் பயணம்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மூன்று ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்ளவுள்ளார். நேட்டோ கூட்டமைப்பை பலப்படுத்தும் வகையில் ஜோ பைடன் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையில் அவர் இங்கிலாந்து, லிதுவேனியா, பின்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்கிறார். முதலில் லண்டன் செல்லும் ஜோ பைடன் இளவரசர் சார்லஸ், பிரதமர் ரிஷி சுனக் உள்ளிட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்தி இருதரப்பு உறவுகளையும் பலப்படுத்த திட்டமிட்டுள்ளார் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

பிறகு லிதுவேனியாவில் 11 ஆம் திகதி மற்றும் 12 ஆம் திகதியில் நடைபெறும் நேட்டோ வருடாந்திர மாநாட்டில் ஜோ பைடன் பங்கேற்கிறார். இறுதியாக பின்லாந்தில் நடைபெறும் அமெரிக்க நார்டிக் மாநாட்டில் பங்கேற்க உள்ளார். (நி-5)

# அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் துப்பாக்கிச்சூடு

## நால்வர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் பிலடெல்பியா நகரில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் உயிரிழந்ததுடன் மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தாக்குதல் நடத்திய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பல அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கைது செய்யப்பட்ட நபர், குண்டு துளைக்காத அங்கியை அணிந்திருந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# சேர்ந்த 10 பேர்
# ப்பட்டு உயிரிழப்பு
## இதுவரை மீட்பு
### பாவில் துயரச்சம்பவம்



40 வயதானவர்கள் எனவும் இக்குடும்பத்தினர் நீராடிக் கொண்டிருந்த இடத்திலிருந்து 25 கிலோமீற்றர் துரத்தில் 7 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் ஏனைய மூவரைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# அமெரிக்காவில் பகவத்கீதை உச்சரிக்கும் நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பகவத் கீதையை உச்சரிக்கும் நிகழ்ச்சியில் 10 ஆயிரம் பேர் கலந்து கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த நிகழ்வு நேற்று அமெரிக்காவிலுள்ள டெக்ஸஸ் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்ச்சியை யோகா சங்கீதா மற்றும் எஸ்.ஜி.எஸ். கீதா அறக்கட்டளை அமைப்பு ஏற்பாடு செய்திருந்ததாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குரு பூர்ணிமாவை முன்னிட்டு நடந்த இந்த நிகழ்ச்சி, உலகப் புகழ் பெற்ற ஆன்மிக சுவாமிகளான பூஜ்ய கணபதி சச்சிதானந்த ஜி முன்னிலையில் நடந்துள்ளதாகவும் இந்திய மைசூரு நகரில் உள்ள அவதூத தத்தா பீடம் ஆசிரமம் தெரிவித்துள்ளது.




சுவாமியின் வழிகாட்டுதலின் பேரில் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களினால் கீதை உச்சரிப்பு நிகழ்ந்துள்ளது.

அவர்களில் பலர் 8 ஆண்டுகளாக சுவாமியைப் பின்பற்றி அதனை நினைவில் கொள்ளும் வகையில் மனப்பாடம் செய்து வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அமெரிக்காவில் இந்து ஆன்மிக தன்மையைப் பரப்பும் நோக்கில் கடந்த சில நாட்களாக சுவாமிஜி இந்த நிகழ்ச்சியை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நடுவானில் மோதிய விமானங்கள்
## ஒருவர் உயிரிழப்பு, மற்றவர் படுகாயம்

(கொலம்பியா)

தென் அமெரிக்க நாடான கொலம் பியாவின் அபியாய் பகுதியில் பயிற் சியின் போது இரண்டு விமானங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் விமானி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இராணுவவீரர்கள் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்ட போது இரு விமானங்கள் விமானியின் கட்டுப்பாட்டை இழந்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதற்கிடையே இரு விமானங்களும் மோதி கீழே விழுந்த வீடியோ அங்குள்ள சமூகவலைத் தளங்களில் வைரலாக பரவியதையடுத்து விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் பயிற்சியின் போது இரண்டாவது விமானத்தில் பயணித்த விமானி பலத்த காயங்களுடன் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# அழகு நிலையங்களுக்கும் தடை விதித்த தலிபான் அரசு

(காபூல்)

தலிபான் அரசு பெண்களுக்கு எதிராக பல தடைகளை விதித்துள்ளது. பெண்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லவும் என்.ஜி.ஓ.வில் பணிபுரியவும் தடைவித்தது.

அத்துடன் பூங்கா, சினிமா மற்றும் பொழுபோக்கு இடங்களில் வேலை செய்ய தடைவித்தது.

அந்த வரிசையில் தற்போது காபூல் மற்றும் நாட்டில் உள்ள மற்ற மாகாணங்களில் பெண்கள் அழகு நிலையங்களுக்கு தடைவிதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

காபூல் நகராட்சிக்கு நல்லொழுக்க அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர், தலிபான் அரசின் புதிய உத்தரவை நடைமுறைப்படுத்தி பெண்கள் அழகு நிலையங்களில் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனால் பெண்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து பெண்கள் உரிமை பறிக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது இதுவும் ஒன்றாகிறது.

ஏற்கனவே ஆண்கள் வேலையின்றி தவிக்கிறார்கள். ஆண்கள் வீட்டுச் சுமையை ஏற்கமுடியாத நிலையில், பெண்கள் அதனை ஏற்க அழகு நிலையங்கள் போன்ற இடங்களில் வேலை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

அவர்கள் தற்போது அழகு நிலையத்திற்கு தடைவிதித்தால், நாம் என்ன செய்ய முடியும்" என மேக்கப் கலைஞர் ஒருவர் தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

மேலும், "ஆண்களுக்கு வேலை இருந்தால், நாங்கள் வீட்டில் இருந்து வெளியே வர மாட்டோம். நாங்கள் தற்போது என்ன செய்வது?, பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான். நாங்கள் என்ன செய்ய வேண்டும்? நாங்கள் சாக வேண்டும் என விரும்புகிறீர்களா?" என்று தனது கவலையை வெளிப்படுத்தினார். காபூலில் வசித்து வரும் நபர் ஒருவர் "தலிபான் அரசாங்கம் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அது இஸ்லாம் மற்றும் நாடு ஆகியவற்றை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்" என்றார். ஆப்கானிஸ்தான் சிறுமிகள் மற்றும் பெண்கள் மீது தலிபான்கள் விதித்துள்ள கட்டுப்பாடுகள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் எதிர்வினைகளைத் தூண்டியுள்ளது. (நி-5)

# வல்லுறவுக் குற்றவாளிகள் மூவருக்கு ஈரானில் மரண தண்டனை நிறைவேற்றம்

(டெஹ்ரான்)

ஈரானில் பாலியல் வல்லுறவு வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 3 ஆண்களுக்கு நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவர்கள் போலியான பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிலையத்தை நடத்தி, பெண்களை அங்கு வரச்செய்து, பின்னர் அவர்களை வல்லுறவுக் குட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

மேற்படி 3 ஆண்களும் 12 வழக்குகளில் குற்றவாளிகள் என 2021 ஆம் ஆண்டில் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.



மருத்துவ உதவியாளர்களான ஒருவர், போலி விளம்பரங்கள் மூலம் 7 பெண்களை மேற்படி போலி சிகிச்சை நிலையத்துக்கு வரவழைத்து, அவர்களுக்கு மயக்க மருந்து செலுத்தி, பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

தாதிகளான ஏனைய இரு ஆண்களுக்கு எதிராக பாலியல் வல்லுறவு, மருந்து திருட்டு முதலான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயனாளர்களை எலோன் மஸ்க் கட்டுப்படுத்துவதாக குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

டுவிட்டர் தொடர்பில் வெளியாகிய புதிய திருத்தம் தொடர்பில் டுவிட்டர் நிறுவனத்தின் தலைவர் எலோன் மஸ்க் பயனாளர்களை கட்டுப்படுத்துவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

டுவிட்டர் நிறுவனம் அதன் பயனாளர்கள் நாள் ஒன்றுக்கு எத்தனை டுவிட்டர்களைப் படிக்கலாம் என்பதைக் கட்டுப்படுத்த ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் சரிபார்க்கப்படாத பயனாளர்கள் நாள் ஒன்றுக்கு ஆயிரம் டுவிட்டர்களையும் சரி பார்க்கப்பட்ட பயனாளர்கள் 10 ஆயிரம் டுவிட்டர்களையும் படிக்க முடியும் என டுவிட்டர் நிறுவனத்தின் தலைவர் எலோன் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எலோன் மஸ்க் ஒரு சமூக ஊடக நிறுவனத்திற்குள் புரிந்து கொள்ள முடியாத ஒன்றைச் செய்து கொண்டிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் அவர் பயனாளர்களின் செயற்பாட்டைக்கட்டுப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகங்கள், பறவைகள் கொறித்த பழங்களை உண்ணாதீர்! ஆபத்து உண்டு!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம் மினிய உறவுகளே!**

நமது நாட்டின் பொருளாதாரசீர்குலைவு காரணமாக விலைகள் அதிகரித்தும் கிடைக்கும் பணத்தில் செலவினத்தைக் கட்டுப்படுத்த முடியாமலும் மக்கள் அங்குமிங்குமாக அல்லல்படுகின்றனர். வாங்கும் பொருட்களை ஒவ்வொருத்தரும் உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி பார்த்து வாங்க வேண்டி இருக்கின்றது.

வேலை வாய்ப்புக்கள் அருகியுள்ள இத்தருணத்தில் மக்கள் உணவுக்காக அலையும் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் கிடைக்கின்றவற்றை உண்ணுகின்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். எது எப்படியிருப்பினும் நோயை எமதுடலில் வலிந்தேற்படாமல் இருப்பதனை உறுதி செய்து கொள்ளல் அவசியமாகின்றது. இதனை வாசிப்பவர்கள் தயவுசெய்து மற்றையவர்களுக்கும் பரிமாறிக் கொள்ளுங்கள். இவை பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியமானதாகும்.

அலட்சியமாக இருந்து பின்னர் அவதிப்படுவானேன். இது எங்களூர் பெரியவர் நாசூக்காக சொன்ன வார்த்தை. அதில் அளவுக்கதிகமான விஞ்ஞான அறிவு அடங்கியிருக்கின்றது. இப்போது மாம்பழ சீசன்.

பல வீடுகளில் உள்ள மாமரங்களில் பறவைகள் மற்றும் விலங்குகள் இரவில் ஆசுவாசமாக பதமான பழங்களை கடித்துண்டு மீதியை அப்படியே விட்டுவிடும். கறுத்தக் கொழும்பான் தோல் பச்சையாகவே இருக்கும். ஆனால் அணில்கள் அவற்றை பதம் பார்த்திருக்கும். பொதுவாக இவ்வாறு பறவைகள் விலங்குகள் கடித்த அல்லது உண்ட பழங்கள் பழுத்திருப்பதனையும் மரங்களுக்கு கீழே வீழ்ந்திருப்பதனையும் எம்மவர்கள் கண்டு அவற்றை சேகரித்து கழுவி விட்டு கடித்த பகுதியை வெட்டி கழித்து விட்டு மீதியை தாமுண்பர்.

இதனை உண்ணும் போது மிகவும் சுவையானதாக இருப்பதாக உண்டவர்சொல்வர். மிருகங்களுக்கு பழங்கள் பழுப்பதன் தார்ப்பரியம் இலகுவாகப் புரியும். அவை பழுக்கும் காலத்தில் தமக்கு வேண்டியளவு உணவாக்கிக் கொள்ளும்.

குறிப்பாக எங்களூர் அணிலுக்கு பழம் பழுப்பதன் பதம் நன்றாகவே தெரியும்.

அதனால் அணில் கடித்தது மிகச் சுவையாக இருக்கும் என்பார்கள். ஆனால் இதனால் வரும் ஆபத்தை பலர் அறிந்திலர். அணிலின் வாய்ச்சுரப்பி (Saliva) பதார்த்தம் கடித்த மற்றும் கொறித்த பழத்தின் பகுதியில் இருக்கும். இந்த வாய்ச்சுரப்பி அல்லது உமிழ்நீர்ச் சுரப்பியினூடாக பக்ரீரியா தொற்று நோயொன்று மனிதருக்கு தொற்றுவதற்கான வாய்ப்பு உண்டு.

அணில்கள் தங்களது வாயினால் அவற்றின் நகங்களை உரசி விடுவதுண்டு. இதன் மூலம் கால் நகங்களில் உள்ள கிருமித் தொற்று இலகுவாக வாய்ப் பகுதிக்குச் சென்று அதன் மூலம் நாம் கடித்த பழத்தை உண்ணும் போது அந்த கிருமிகள் எமது உடலுக்குள் சென்று விடும். அணில்களுக்கும் பல் நோய் ஏற்படுவதுண்டு. அவ்வாறு ஏற்படும் பல்நோய்களை தோற்றுவிக்கும் ஒருவகை பக்ரீரியாக்கள் அவையுண்ட பழத்தை நாமுண்டால் இலகுவாக எமக்கு தொற்றிவிடும். அவையுண்ட பழங்களில் இவ்வாறான வைரசு உயிர் வாழ்ந்து இலகுவில் மனிதனுக்கு தொற்றிவிடும்.

அணில்கள் பழங்களை உண்ணும் போது முன்னங்கால்களால் பழத்தை பற்றி வைத்துக் கொண்டு கொறிக்கும். அவ்வாறு முன்னங்கால்களால் பழத்தை பற்றியிருக்கும் போது கால் நகங்களில் உள்ள கிருமிகள் பழத்தை வந்தடைய வாய்ப்புக்கள் உண்டு.

அதிலும் கால்நகங்களில் அவற்றின் கழிவுகள் குறிப்பாக அணில்கள் கொய்யாப்பழம், வாழைப்பழம், ஜம்பு, அன்னமுன்னா மற்றும் மாம்பழம் ஆகியனவற்றை விரும்பியுண்ணும். இவ்வாறு உண்ணப்பட்ட பழங்களில் சில மரத்தில் தொங்கிய படியும் ஏனையவை கீழேயும் விழுந்திருக்கும், இவற்றை கவனமாக அகற்றுதல் மிகவும் சிறந்தது. வெறுங்கையால் கடித்துண்ட பழங்களை பொறுக்குவதும் அவற்றை கைகளில் வைத்திருக்கும் போது கடியுண்ட பகுதிகளில் கைகள் படும் போது அதிலுள்ள கிருமிகள் கைகளில் தொற்றுதலாவதற்கான சாத்தியம் அதிகம்.

அணில் கொறித்த பழங்களின் கடித்த பகுதியை வெட்டியெறிந்தாலும் அந்தப் பழத்தை உண்ணுதனை தவிர்ப்பதே உகந்தது. தற்போதுள்ள பொருளாதார இடர் காலத்தில் மக்கள் கிடைக்கின்றவற்றை உண்ணும் பழக்கத்துக்குள் மீண்டும் வர முனைகின்றார்கள். இந்நிலையில் இவ்வாறான நோயாக்கிகளை கொண்ட பழங்களை வேறாக்கி அவற்றை எரித்த பின் புதைத்து விடுவதே சிறந்தது.

காகம், கிளி, வௌவால் போன்ற பறவைகள் கடித்த, கொந்திய பழங்களை உண்பதும் மிக ஆபத்தானதே. குறிப்பாக பறவைகள் உண்டு விட்ட மீதிகளில் நோயாக்கி கிருமிகள் பரந்திருக்கும். இவற்றின் மூலம் இந்நோய்கள் இலகுவில் தொற்று தலாகி விடும். பறவைக் காய்ச்சல் போன்ற வைரசு காய்ச்சல் மேற்படி பறவைகள் மூலம் பரவுவது அறியப்பட்டுள்ளது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




மேலைத் தேயங்களிலிருந்து எமது பிரதேசங்களுக்கு வரும் பறவைகள் மூலம் இவ்வா றான வைரசுக்கள் பரவல டைந்தாலும் இங்குள்ள பறவைகளின் மூலமும் இதற்கான வாய்ப்புக்கள் இருப்பதனால் நாம் கவனமாக இருத்தல் வேண்டும்.

வாழையிலையில் உணவருந்துவோர் வாழையிலையினை நன்றாக கழுவி விட்டு அதில் உணவருந்துதல் நல்லது. வாழையிலை, தேக்கமிலை, இன்னும் தாமரையிலை போன்றவற்றில் உணவு பரிமாறுவதற்கு முன்னர் அவற்றை நன்றாக கழுவுதல் மிக அவசியம். இவ்வகை இலைகளை மரங்களிலோ அல்லது தடாகத்திலோ தெரிவு செய்யும் போது அதன் மேல் பறவைகளின் எச்சம் இருந்தால் அவற்றை தவிர்ப்பது என்றுமே நல்லது.

பறவைகளின் எச்சம் இருந்து இலைகளின் மேல் நன்றாக கழுவாது உணவு பரிமாறினால் அதன் மூலமாக பறவைக் காய்ச்சல் தொற்றுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

விலங்குகளின் மற்றும் பறவைகளின் சிறுநீரில் மற்றும் எச்சங்களில் நோய்க் கிருமிகள் தொற்றுதலாகி இருப்பதனால் நாம் கவனமின்றி செய்யும் செயல்கள் ஒருவருக்கு நோயை வரவழைக்கக் காரணமாகி விடக் கூடாதல்லவா.

தற்போது இளநீர் தென்னையில் ஒருவகை வெள்ளை ஈயின் தாக்கம் அதிகமாக காணப்பட்டு அவற்றை கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் பிரயத்தனப்பட்டிருந்தோமல்லவா. அந்த வெள்ளை ஈ வாழையிலைகளின் கீழ்ப்பகுதியில் முட்டையிட்டு,தனது இனப்பெருக்கத்தை விரிவாக்கியதை நாம் அனுபவத்தால் கண்ணுற்றோமே.

அதுபோல எந்த வகை நோயானாலும் சரி பீடையாயினும் சரி சுத்தமானதாக வருமுன் காப்போம் நோய்ப் பொறிமுறையை நாம் நேர்த்தியாக கையாண்டால் இவ்வாறான தொற்று நோய்கள் எம்மை அணுகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். இருந்தும் மேற்கூறிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னாரில் கண்டனப் பேரணி

(மன்னார்)

**மன்னார் மாவட்ட நகரப் பகுதிக்குள் எந்த ஒரு மதுபானசாலைக்கும் அனுமதி வழங்க வேண்டாம் என கோரிக்கை விடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் நகரப் பகுதியில் அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



பிரஜைகள்குழு, மகளிர் அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏற்பாட்டில் மன்னார் நகர மத்திய பகுதியில் ஆரம்பித்த குறித்த போராட்டம் நகர பகுதி ஊடாக மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

மன்னாரில் கத்தோலிக்க, இந்து ஆலயங்கள்,பாடாசாலை மற்றும் அதிக மக்கள் குடியிருப்பு அமைந்துள்ள பகுதியில் மதுபானசாலை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் குறித்த பகுதிக்கு அருகாமையில் மருத்துவமனை பிரதான வீதி, தனியார் கல்வி நிறுவனங்கள், மாற்று திறனாளிகள் பாடசாலைகள் என பல தரப்பட்ட பொதுநிறுவனங்கள் அமைந்துள்ள நிலையில் இவ்வாறான மதுபானசாலைக்கு அனுமதி வழங்குவதனால் அப்பகுதியில் விபத்துக்கள், முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் தெரிவித்து குறித்த போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

அனுமதி வழங்கும் அதிகாரிகளே மக்களின்அழிவுக்கு துணை போகாதே, பொருளாதார நெருக்கடி மத்தியில் மதுபானசாலைகள் வேண்டாம், புனித பாதையில் வன்முறை ஏற்பட வழி வகுக்காதே போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மதுபானசாலை அமைக்கும் திட்டத்தை நிறுத்தக் கோரியும் குறித்த பகுதியில் மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்புவதற்கான மகஜர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மன்னார் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், இந்து ஆலய குருக்கள், சட்டத்தரணிகள், நகரசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மெசிடோ நிறுவன ஊழியர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (நி-6-285)

## பொன்னகர் பகுதியில் காணிகளின்றி வாழும் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கக் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பொன்னகர்ப் பகுதியில் சுமார் 98 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் சொந்தக் காணிகள் இன்றியும் வாழ்விட வசதிகள் இன்றியும் வாழ்ந்து வரும் நிலையில் குறித்த பிரதேசத்தில் வெளியாட்களுக்கு காணி வழங்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர்கள் பிரிவுக்குட்பட்ட பொன்னகர்ப் பகுதியில் சொந்தக் காணிகள் இன்றி சுமார் 98 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு சொந்தக் காணிகள் இல்லாத காரணத்தால் 98 குடும்பங்களும் நிரந்தர வீட்டுத் திட்டங்களையோ அல்லது மலசலகூட வசதிகளையோ குடிநீர் இணைப்புக்களையோ பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலும் வாழ்விட வசதிகள் இன்றியும் நீண்டகாலமாக வாழ்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் உள்ள காணிகள் நாளாந்தம் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் வெளியிடங்களில் இருந்து வருபவர்களுக்கும் காணிகள் இலகுவாக வழங்கப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

இதே வேளை குறித்த பகுதியில் உள்ள மேற்படி குடும்பங்களுக்கு காணிகளை வழங்கக் கோரியும் வெளியாட்களுக்கு காணிகள் வழங்கப்படுவதை நிறுத்தக் கோரியும் பிரதேச மக்கள், பொதுஅமைப்புக்கள் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)

## உலக வங்கியின் நிதித்திட்டத்தில் 17 நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் உள்ள 17 சிறிய நீர்ப்பாசன குளங்களின் புனரமைப்புப் பணிகள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் கமநல சேவை நிலையங்களின் கீழ் உள்ள 17 குளங்கள் புனரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டு 14 குளங்களின் புனரமைப்புப் பணிகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏனைய மூன்று குளங்களின் புனரமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்ட உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள பல்லாய்க் குளம், சின்னக்குளம், வீரமோட்டைக் குளம் , மின்னில் குளம், ஈநொச்சி மோட்டைக்குளம் ,இத்தாவில் குளம், சின்ன இத்தாவில் குளம், திக்குவில் குளம் , குஞ்சுக் குளம், மன்னியா குளம், செம்மணகுன்றுக்குளம் , தெக்கேரிக் குளம், ஓயாமாரிக்குளம், கோரமோட்டைக்குளம் ஆகிய குளங்கள் புனரமைப்பு பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏனைய மூன்று குளங்களின் புனரமைப்பு பணிகளும் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-315)

# நெல்லுக்கு உரிய விலையை நிர்ணயிக்கக் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கை அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல்லுக்கு உரிய விலை இன்றியும் நெல்லை சந்தைப்படுத்த முடியாமலும் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள 1746 ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் நாற்பது வீதமான அறுவடை நிறைவடைந்துள்ளன.

ஆனாலும் இதுவரை விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லை மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களோ அல்லது நெல் சந்தைப்படுத்தும் சபையோ விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யாத நிலையில் தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களும் வர்த்தகர்களும் மிக குறைந்த விலைகளில் நெல்லை கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அரசாங்கம் நெல்லுக்குரிய விலையை நிர்ணயிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)

## நயினாதீவு ரஜமகா விகாராபதிக்கு பொன்விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ரஜமகா விகாரை விகாராதிபதி நவதலைபதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் 50 வருடங்களாக நயினை மண்ணிற்கும் மக்களுக்கும்ஆற்றிவரும்சேவையை கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நயினாதீவு மணி மேகலை கலாமன்றத்தில் இடம்பெறும். (நி-6)

## வவுனியா நகரசபைக்கு புதிய செயலாளர் நியமனம்

(நெளுக்குளம்)

வவுனியா நகர சபையின் வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவிக்கு புதிதாக செயலாளர் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகர சபையின் செயலாளராக கடமையாற்றிய இ.தயாபரன் வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றதையடுத்து தற்காலிக செயலாளர் மூலம் இயங்கி வந்தது.

இந்நிலையில் புதிய செயலாளராக கடந்த நான்கு வருடங்களாக செட்டிக்குளம் பிரதேச சபையில் செயலாளராக கடமையாற்றி வந்த பூ.செந்தில்நாதன் வவுனியா நகரசபைக்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன், நேற்று ... கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். (நி-6-299)

## மன்னாரில் தீக்கிரையான வீடு மீள் புனரமைக்க உதவி வழங்கி வைப்பு

(மன்னார்)

மன்னார் தோட்டவெளி பகுதியில் கடந்த வாரம் குடிசை வீடு ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டதன் காரணமாக முழு வீடும் எரிந்து நாசமாகியிருந்தது.

குறித்த குடும்பம் மிகவும் வறுமைப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்ததுடன் 7 ஆம் தரம் மற்றும் 9 ஆம் தரத்தில் கற்கும் இரு பிள்ளைகள் உட்பட அக் குடும்பத்தினர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் எரிந்த வீட்டை கூட சரிப்படுத்த முடியாத நிலையில் பலரிடம் உதவி கோரியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த கோரிக்கையினை ஏற்று மன்னார் தமிழரசுக்கட்சியின் கிளை தலைவரும் சட்டத்தரணியுமான டினேஸனின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த குடும்பத்தின் வீட்டின் கூரை அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (நி-6-315)




அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்படாதவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்ய முடியும் என தெரிவித்ததைத் தொடர்ந்து கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகம், கண்டாவளை பிரதேச செயலகத்திலும் குறித்த மேன்முறையீட்டுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. (படம்:-தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 221





மந்திரவாதி ஓலமிட்டுக் கொண்டு கீழே விழுந்தான். அதேசமயத்தில் அந்தப் பழைய தூண் சரிந்து விழுந்தது. மேலே கூரையிலிருந்து பொலபொலவென்று கற்கள் விழுந்தன. வௌவால் ஒன்று படபடவென்று சிறகை அடித்துக் கொண்டு வெளியே சென்றது. அதைத் தொடர்ந்து வந்தியத்தேவனும் வெளியேறினான். ஓட்டம் பிடித்தவன் சிறிது தூரம் வரையில் திரும்பிப் பார்க்கவேயில்லை. பின்னால் யாரும் தொடர்ந்து வரவில்லையென்று நிச்சயமான பிறகு தான் நின்றான். அந்த இரவு அனுபவத்தை நினைத்ததும் வந்தியத்தேவனுடைய உடம்பெல்லாம் இப்போதுகூட கிடுகிடுவென்று நடுங்கியது.

அந்தப் பயங்கர நினைவுகளுக்கிடையில், "ஐயா! காஞ்சியிலிருந்து தாங்கள் புறப்பட்டு எத்தனை காலமாயிற்று?" என்று குந்தவை கேட்டது அவனுடைய காதில் விழுந்து அவனுக்கு மனத் தெளிவை அளித்தது.

"ஒரு வாரமும் ஒரு நாளும் ஆயிற்று, தேவி!" என்றான்.

"இதற்குள் இவ்வளவு பகைவர்களை நீர் சம்பாதித்துக் கொண்டது விந்தையிலும் விந்தைதான். இவ்வளவு அதிசயமான காரியத்தை எப்படிச் சாதித்தீர்?"

"அது பெரிய கதை, தேவி!"

"இருந்தால் பாதகமில்லை. சொல்லலாம். அந்த விபரங்களைத் தெரிந்து கொண்ட பிறகுதான் தங்களுக்கு நான் இட வேண்டிய பணியை இடக்கூடும்."

இவ்வாறு இளவரசி கூறிவிட்டு, ஈசான சிவபட்டரை அருகில் அழைத்து, "படகோட்டி எப்படிப்பட்டவன்?" என்று கேட்டாள்.

"இரண்டு காதும் நல்ல செவிடு. இடி இடித்தாலும் கேளாது, தாயே!"

"ரொம்ப நல்லது. படகிலேறிக் கொஞ்சதூரம் ஓடையில் போய்விட்டு வரலாம் வாருங்கள்! இவருடைய கதையை முழுதும் நான் கேட்க வேண்டும்!" என்றாள்.

வல்லவரையன் புளகாங்கிதம் அடைந்தான். சோழர் குலத் திருமகளோடு ஒரே படகில் செல்லும் பாக்கியம் எளிதில் கிட்டுவதா? அதைப் பெறுவதற்கு ஏழு ஜன்மங்களில் தான் தவம் செய்திருக்க வேண்டாமா? படகில் ஏறிய பிறகு எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் கதையை நீட்டி வளர்த்திச் சொல்ல வேண்டும்! சுருக்கமாக முடித்து விடக் கூடாது! அவசரம் என்ன? அரிதில் பெற்ற பாக்கியத்தை எளிதில் கைநழுவ விட்டுவிடலாமா?

வந்தியத்தேவனுக்கு அவசரமில்லை தான். ஆனால் படகு ஓடையில் நகர்ந்து அவன் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் நடந்ததைச் சொல்லத் தொடங்கியது. முதலாவது குந்தவைக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் அவசரமும் பரபரப்பும் அதிகமாகி வந்தன. "மேலே என்ன?" "அப்புறம் என்ன?" என்று கேட்டுத் துரிதப்படுத்தி வந்தாள்.

வந்தியத்தேவன் அவனுடைய தீர்மானத்தின்படி கூடிய வரையில் கதையை வளர்த்தினான். எவ்வளவு நீண்ட கதையாயினும் முடிவு ஒன்று வந்து தானே ஆக வேண்டும்? கதை முடிந்த போது படகும் திரும்ப ஓடைப் படித்துறைக்கு வந்து சேர்ந்தது.

படகிலிருந்து அவர்கள் இறங்கிப் பூங்காவுக்குள் வந்த போது, அரண்மனையில் இன்னும் குரவைக் கூத்து நடந்து வந்ததற்கு அறிகுறியாக இசைக்கருவிகளும் தண்டைச் சிலம்புகளும் ஒலித்தன. பின்வரும் சிலப்பதிகார வரிப் பாடலும் கேட்டது.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

### நாவினால் சுட்ட வடு



ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும்.

கோபம் வந்தால் தலை,கால் தெரியாமல் வாய்க்கு வந்தபடி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப்படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்று தான் தெரியவில்லை.

அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒருநாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மரவேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றிவிடும் படி அறிவுரைத்தார்.

முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால் தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே.

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்து போய்வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது. எல்லா ஆணியையும் பிடுங்கிய பிற்கு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடு சொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும் அந்தச் சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களால் எனக்கு பறக்க கற்றுக் கொடுக்க முடியா விட்டால், எனக்கு பாடக் கற்றுக் கொடுங்கள்.
– ஜேம்ஸ் எம்.பாரி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# உலக நாடுகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நாடாக இலங்கை மாறும்

## பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன

(கொழும்பு)

செப்டம்பர் மாதத்துக்குள் இலங்கையை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார். அதனால் எதிர்வரும் 12 வருடங்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினால் சர்வதேச நாடுகளில் உள்ளவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கும் நாடாக இலங்கை மாறும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், வங்குரோத்து அடைந்துள்ள இந்த நாட்டை எதிர்வரும் செப்டம்பர் மாதம் இறுதியாகும் போது அந்த நிலையில் இருந்து மீட்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கிறார். அதற்கான நடவடிக்கையை ஏற்கனவே ஆரம்பித்திருக்கிறார்.

உலக நாடுகளிடமிருந்து உதவிகளை பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல்களையும் ஆரம்பித்திருக்கிறார். எமது நாட்டின் மொத்த கடன் தொகை 83 பில்லியன் டொலராகும். கடன் மறுசீரமைப்பின் மூலம் 17 பில்லியன் டொலர்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை கடன் வழங்கிய நாடுகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடி வருகிறார்.

அத்துடன், பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள வெளிநாட்டு கடன்களை மாத்திரம் மறுசீரமைப்பதன் மூலம் நாங்கள் எதிர்பார்க்கும் இலக்கை எட்ட முடியாது. தேசிய கடன் மறுசீரமைப்பும் மேற்கொள்ள வேண்டும். அதற்காக அனைவரதும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

அதன்பிரகாரமே தேசிய கடன் மறுசீரமைப்புக்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக குறித்த பிரேரணை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

என்றாலும் இந்த பிரேரணைக்கு 66 பேர் எதிராக வாக்களித்திருந்தனர். இவர்கள் தொடர்பில் மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை மக்களின்கைகளிலேயே இருக்கிறது. ஏனெனில் பாராளுமன்றத்தில் இருக்கும் அனைத்து அரசியல் கட்சி உறுப்பினர்களும் ம்க்களின் பிரதிநிதிகளாகும். அதனால் நாட்டை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத் திட்டத்துக்கு எதிராக செயற்பட்டுவரும் மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக மக்கள் செயற்பட வேண்டும் என்றார். (ம-7)

# கம்பன் கழகத்தின் இசை விழா கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்

அகில இலங்கை கம்பன் கழகம் கடந்த யூன் 29ஆம் திகதி தொடக்கம் நான்கு நாட்கள் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இசை விழாவை நடத்தியது.

உள்ளூர் கலைஞர்களும் இந்தியக் கலைஞர்களுமாக நடத்திய அந்த இசைவிழாவின் பெறுமதியை அனுபவித்தாலன்றி வேறு, மனித மொழிகளால் விபரித்துவிட முடியாது.

அந்தளவுக்கு நல்லூர் திருமண் இசை மழையால் நனைந்தது. கூடவே மண்டபம் நிறைந்த ரசிகர் கூட்டம்.

சுருங்கக்கூறின் நான்கு நாட்களும் ரசிகர் கூட்டம் இசையால் கட்டுண்ட காட்சியைக் கண்டபோது எம்மை அறியாமலே எமக்குள் ஏற்பட்ட மனநிறைவின் பெறுமதியை எந்த அலகிலும் மதிப்பிட்டு விட முடியாது.

இவை ஒருபுறமிருக்க, நான்காவது நாள் மாலை நிகழ்வின் நிறைவாக, இந்திய கர்நாடக இசை மேதை திருமதி அருணா சாய்ராம் அவர்கள் பொழிந்த கான மழையில் ஒட்டுமொத்த ரசிகர்களும் வசமாகிப்போனதைக் கண்டு பிரமித்துப் போனோம்.

ஆம், அந்த இசை விழாவின் நிறைவு நாளுக்கு தலைமை ஏற்ற கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் கர்நாடக சங்கீதத்துக்கு எங்கள் யாழ்ப்பாண மண் கொடுத்த உயர்வின் பெருமையை எடுத்தியம்பியபோது இந்தியக் கலைஞர்கள் மட்டுமன்றி நம்மவர்களும் திகைத்துப் போயினர்.

ஆம், மிகக் குறுகிய உரைக்குள் எங்கள் யாழ்ப்பாண மண்ணின் இசைப் பாரம்பரியத்தை; இதைவிட வேறு எப்படியும் கூறிவிட முடியாது என்று கூறுமளவில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமை உரை அமைந்தபோது, முன்வரிசையில் அமர்ந்திருந்த இந்தியக் கலைஞர்கள் அந்த உரையின் மகிமையை தங்கள் கைகளை உயர்த்தி அங்கீகரித்தவேளை, எங்கள் மண்ணின் பெருமை கண்டு நம் தோள்புயங்கள் உயர்ந்தன.

கூடவே அந்த இசை நிகழ்வில் இருபத்திரண்டே வயதான கேரள இளைஞன் வாசித்த வயலின் இசையைப் பார்த்தபோது எங்கள் மண்ணிலும் இப்படி வராதா என்று மனம் ஏங்கிற்று.

எல்லாவற்றுக்கும் மேலாக, நிகழ்வென்றால் அதனை எப்படி நடத்த வேண்டும் என்று நாம் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டிய கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் ஏற்பாடுகள் எப்போதும் போல இமயம் தொட்ட பெருமைக்கு ஆட்பட்டது.

ஆக, அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய இசைப் பெருவிழாவில் நம் இசைத்துறை நிறையவே கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் உண்டு.

அதில் மிக முக்கியமானது, முழுமையான இசை அறிவுக்கான தேடலும் பயிற்சியும் அரங்கும் இசைத்துறை சார்ந்தவர்களைத் தட்டிக் கொடுக்கும் மனநிலையும் நம் இசைத்துறைக்கு மிகவும் கட்டாயமானது என்பதுதான்.

# இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி இறுதியாக கடந்த 28 ஆம் திகதி வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி 316 ரூபா 67 சதமாகவும், கொள்முதல் பெறுமதி 301 ரூபா 15 சதமாகவும் பதிவாகியிருந்தது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு இணையாக தொடர் விடுமுறையின் பின்னர், அனைத்து வங்கிகளினதும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியது.

இந்தநிலையில் மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை பெறுமதி 314 ரூபா 98 சதமாகவும், கொள்முதல் பெறுமதி 299 ரூபா 87 சதமாகவும் பதிவாகியுள்ளது. (ம-7)

# ஜனாதிபதி தலைமையில் கதிர்காம எசல பெரஹரா

(கதிர்காமம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பிற்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் புண்ணிய தலத்துக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கதிர்காமம் வருடாந்த எசல மகா பெரஹராவின் இறுதி நாளான நேற்று பெரஹ்ராவை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கந்துல ஹஸ்தி ராஜாவின் மீது தாது கலசத்தை ஸ்தாபித்தார்.

அதன் பின்னர் இறுதி பெரஹராவை பார்வையிட்ட ஜனாதிபதி, கதிர்காமம் சமன் தேவாலயத்திற்கும் சென்று ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார். (நி)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில்** ஆனையிறவு உப்பளம், இயக்கச்சி முகாம், விளாஓடை இராணுவமுகாம், நோர்த் லங்கா வேளாண் உணவுத் தொழிற்சாலை, சுகந்தன் அரிசி ஆலை, ஆனையிறவு புகையிரத நிலையம், ஆனையிறவு சோதனைச் சாவடியடி, தட்டுவன் கோட்டை, உமையாள்புரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சன்னார் இராணுவ முகாம், ஈச்சலவக்கை, பெரியமடு, பெரியமடுகிழக்குதிட்டம், பெரியமடுநீர்வழாங்கல்சபை, பெரியமடுமேற்குதிட்டம், சன்னார், பள்ளமடு, சன்னார்கிராமம், ஆசிக்குளம், மறக்கறம்பளை - கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# கஞ்சா மற்றும் ஹெரோயினுடன் நேற்றும் மூவர் அதிரடிக் கைது

(பொத்துவில்)

பொத்துவில் பொலிஸ்பிரிவிலுள்ள பிரதேசத்தில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் 3 பேரை விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று பொத்துவில் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் பொத்துவில் நகரப் பகுதியில் 26 வயதுடைய ஒருவரை 350 மில்லி கிராம் கஞ்சாவுடனும் சியம்பலாண்டுவ பகுதியை சேர்ந்த 21 வயதுடைய ஒருவரை 200 மில்லி கிராம் கஞ்சாவுடனும் கைது செய்தனர்.

அதே வேளை அறுகம்பை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து உல்லை பகுதியிலுள்ள உணவகத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவரை கைது செய்துள்ளனர். (ம-7)

# சீரற்ற காலநிலை ஹட்டனில் பாடசாலைகளுக்கு இன்று விசேட விடுமுறை

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்து அரச பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறைவழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அந்தப் பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலையை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# தென்னிலங்கையில் கோர விபத்து தாயும் மகளும் உயிரிழப்பு

காலி கரந்தெனிய பிரதேசத்தில் கார் -கனரக வாகனம் நேருக்கு நேர் மோதியதில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

விடுமுறை நாட்களில் மலையகத்துக்குச் சுற்றுலா சென்றுவிட்டு கர ந்தெனிய பிரதேசத்திலுள்ள வீட்டுக்குக் காரில் வந்து கொண்டிருந்த குடும்பமே வீட்டுக்கு 500 மீற்றர் தொலைவில் விபத்தில் சிக்கியுள்ளது.

பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்த கனரக வாகனம் காருடன் மோதியதில் அதில் இரு ந்த 38 வயதுடைய தாயும் 13 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

காரைச் செலுத்தி வந்த 42 வயதுடைய தந்தை படுகாயங்களுடன்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கனரக வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

09



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**சத்தாதீசன் (கி.மு. 137 - 119)**

சத்தாதீசன்-அநுராதபுர இராச்சியத்தை கி.மு. 137 முதல் கி.மு. 119 வரை ஆண்ட மன்னன். சத்தாதீசன் உருகுணை மன்னனான காக்கவண்ணதீஸனின் மகனும் அநுராதபுர மன்னன் துட்டகைமுனுவின் சகோதரனும் ஆவான்.

**துலத்தன் (கி. மு. 119)**

துலத்தன் அநுராதபுரத்தை கி.மு. 119 இல் ஆண்ட பண்டைக் கால அரசர்களில் ஒருவராவார். இவரின் தந்தை சத்தாதீசன் ஆவார். கல்லாடநாகன், லஞ்சதீசன்,வலகம்பாகு ஆகியோர் இவருடன் உடன் பிறந்தவர்கள் ஆவர்.

**லஞ்சதீசன் (கி.மு. 119 - கி.மு. 109)**

சத்தாதீசன் மகனான லஞ்சதீசன் என்பவன் கி.மு. 119 தொடக்கம் கி.மு. 109 வரை இலங்கையின் அநுராதபுர இராச்சியத்தை ஆண்ட அரசனாவான். இவனின் மறுபெயர் லமினிதீசன் ஆகும். இவன் பத்து ஆண்டுகள் அநுராதபுர இராச்சியத்தை ஆண்டான்.

அநுராதபுர மன்னர்களுள் ஒருவனான சத்தாதீசனது மூத்த மகனான லஞ்சதீசன் சிங்கள மக்களின் கலாசாரப்படி சத்தாதீசன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த போது லஞ்சதீசன் உருகுணையின் மன்னனாகத் திகழ்ந்தான். சத்தாதீசன் இறந்த பின்பு மகாவிகாரையின் பிக்குகளின் அறிவுறுத்தலின்படி அரசனின் இளைய மகனான துலத்தனை ஆட்சி பீடம் ஏற்றினர். இச்செய்தி கேட்ட லஞ்சதீசன் உருகுணையிலிருந்து அணிவகுத்துச் சென்று துலத்தனை ஆட்சியிலிருந்து விலக்கி சிம்மாசனத்தை தான் கைப்பற்றிக் கொண்டான்.

ஆரம்பத்தில் லஞ்சதீசனுக்கும் பிக்குகளுக்கும் இடையே முறுகல் நிலையே காணப்பட்டது. எனினும் பின் லஞ்சதீசன் பௌத்த மதத்தை வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்லாடநாகன் (கி.மு. 109 -103)**

கல்லாடநாகன் என்பவன் கி.மு. 109 தொடக்கம் கி.மு. 103 வரை இலங்கையின் அநுராதபுர இராச்சியத்தை ஆண்ட அரசனாவான். இவன் சத்தாதீசனின் இளைய மகனாவான். துலத்தன் மற்றும் லஞ்சதீசன் ஆகியோரின் தம்பியும் ஆவான். இவனின் பின் வலகம்பாகு ஆட்சி பீடம் ஏறினான். இவனுக்கு எதிராக இவனின் ஆட்சிக் காலத்தில் இரண்டு சதிகள் நடைபெற்றன. அதில் ஒன்று திச்ச அப உத்தர எனும் இளவரசிகள் கலகங்களை உண்டாக்கி இவனது ஆட்சியை கவிழ்க்க முயற்சித்தனர்.

மற்றையது அரசனின் படைத் தலைவன் மஹாரத்தக என்பவனால் ஏற்பட்டது. இச்சதி காரணமாக மன்னன் உயிரிழந்தான். அவன் உயிரிழந்ததுடன் படைத் தலைவன் அரசனானான். எனினும் இவனது ஆட்சி சில நாட்களே நீடித்தது. மன்னனின் இளைய புதல்வனான வட்டகாமினி (வலகம்பாகு) மகாரத்தக சேனாதிபதியைத் தோற்கடித்து கி.மு 103 அரசனானான். தமது பரம்பரைக்கு சொந்தமான அரசுரிமையை மீண்டும் பெற்றுக் கொள்வதில் இவன் வெற்றி பெற்றான்.

**வலகம்பாகு (கி.மு. 103)**

வலகம்பாகு அல்லது வட்டகாமினி அபயன் என்பவன் இலங்கையின் அநுராதபுர அரசனாவான். அரசனாகி ஐந்து மாதங்களுக்குப் பின் தென்னிந்தியாவில் இருந்து வந்த ஒரு கிளர்ச்சிப் படை இவனை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் பதினான்கு ஆண்டுகள் கழித்து படையெடுப்பாளர்களை தோற்கடித்து மீண்டும் அரியணை ஏறினான்.

துட்டகாமினியின் சகோதரனான சத்தாதீசனின் நான்காம் மகன் ஆவான். இவனுடைய மூத்த சகோதரர்களான துலத்தன் லஞ்சதீசன்-கல்லாட நாகன் என்போர் இவனுக்கு முன்பே ஆட்சி புரிந்தனர்.

துட்டகைமுனுவின் மரணத்தின் பின்னர் அவரது மகன் சாலியவுக்கு அரச பதவி கிடைக்கவில்லை. சாலிய “தாழ்த்தப்பட்ட” சாதியைச் சேர்ந்த பெண்ணை திருமணம் முடித்ததால் தான் சாலியவுக்கு அந்தப் பதவி வழங்கப்படவில்லை என்கிறது சிங்கள வரலாற்று இலக்கியங்கள். ஆகவே துட்டகைமுனுவுக்குப் பின் அரச பதவி அவரின் சகோதரன் சத்தாதீசனுக்கே போனது. சத்தாதீசனின் மரணத்துக்கு பின் அவரது மகன்கள் மாறி மாறி ஒருவரை ஒருவர் கொலை செய்து ஆட்சி செய்தனர். அவர்களில் கடைசி இளைய மகன் தான் வலகம்பா.

**பஞ்சபாண்டியர் (கி. மு. 103- 88)**

அநுராதபுரத்தின் பஞ்ச பாண்டியர் என்பவர்கள் வடஇலங்கையை கி.மு. 103 முதல் கி.மு. 88 வரை தொடர்ச்சியாக ஆண்ட ஐந்து பாண்டியத் தளபதிகள் ஆவர். இவர்களில் புலாகதனைத் தவிர்த்த மற்ற நால்வரும் தனக்கு முன்னிருந்த பாண்டியத் தளபதிகளை கொன்றே வட இலங்கையின் ஆட்சியை கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாண்டியர்கள் படை எடுப்புக்கு முன் வடஇலங்கையை ஆண்டு வந்தவன் வலகம்பாகு என்பவன் ஆவான். வலகம்பாகுக்கு முன் ஆட்சி செய்த அவன் அண்ணனான கல்லாடநாகனை அவனது அமைச்சனான காமகாரத்தகன் என்னும் மகாரத்தகன் கொன்று ஆட்சியை பிடித்தான். அதன் காரணத்தால் காமகாரத்தகனை கொன்று வலகம்பாகு மீண்டும் ஆட்சியை பிடித்ததுடன் கல்லாடநாகனின் மகனான மகாசூலிகனை தத்தெடுத்து அவனின் தாயான அனுலாதேவியை தன் அரசியாகவும் ஆக்கிக் கொண்டான். இவனுக்கு சோமதேவி என்ற இன்னொரு துணைவியும் உண்டு. இவன் கி.மு. 103 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆட்சியை பிடித்து ஐந்து மாதங்கள் கடந்திருந்த போது அவனின் ஆட்சியில் இருந்த தீசன் என்னும் பிராமணன் வலகம்பாகுக்கு எதிராக கிளர்ச்சியில் இறங்கினான்.

பிராமணதீசன் கிளர்ச்சியில் இறங்கிய நேரத்தில் தமிழகத்தில் இருந்து ஏழு பாண்டிய தளபதிகள் அநுராதபுரத்தின் மீது படை எடுத்தனர். அவர்களுடன் கூட்டு சேர்ந்து பிராமண தீசன் ஆட்சியை தங்களிடம் ஒப்படைக்கும்படி வலகம்பனிடம் எச்சரிக்கைத் தூதனுப்பினர். வலகம்பாகு பிராமணதீசனுக்கு படையெடுத்த ஏழு தமிழர்களையும் நீ வென்றால் உனக்கே ஆட்சியை அளித்து விடுகிறேன் என தூதனுப்பினான். பிராமணதீசன் ஏழு பாண்டியர்களையும் எதிர்த்து தோல்வி அடைந்தான். வலகம்பாகு பாண்டியர்களை எதிர்த்து நடந்த போரில் தோல்வி அடைந்தான்.

ஏழு பாண்டியத் தளபதிகளில் ஒருவன் வலகம்பாகுவின் மனைவியான சோமதேவியையும் இன்னொருவன் புத்தரின் பத்து சக்திகளும் அடங்கி இருந்த புனிதக் கிண்ணத்தையும் தமிழகத்துக்கு எடுத்துச் சென்றனர். மற்ற ஐந்து பாண்டியர்களும் தங்களில் ஒருவனான புலாகதன் கீழ் வட இலங்கையில் ஆட்சியை அமைத்தனர். வலகம்பாகு உருகுணைக்கு தப்பிச் சென்று தானசிவன் என்ற முனிவனிடம் அடைக்கலம் புகுந்து தென்னிலங்கையில் மறைந்து வாழ்ந்து வந்தான்.

**புலாகதன் (கி.மு. 103 -100)**

புலாகதன் என்பவன் வடஇலங்கையின் வலகம்பாகு அரசின் மீது படை எடுத்த ஏழு பாண்டியத் தளபதிகளில் ஒருவன். முதலில் இவனின் கீழே வடஇலங்கையில் பாண்டியத் தளபதிகளின் ஆட்சி அமைக்கப்பட்டது. இவன் கி.மு. 103 முதல் கி.மு.100 வரை வடஇலங்கையை ஆண்டான். தன்னுடன் தமிழகத்தில் இருந்து படை எடுத்து வந்த 6 தளபதிகளில் ஒருவனான பாகியனை தன் அமைச்சனாக ஆக்கினான். இறுதியில் பாகியனாலேயே கொல்லவும்பட்டான்.

**பாகியன் . (கி.மு. 100 - 98)**

பாகியன் வடஇலங்கையை ஆண்ட ஐந்து பாண்டியர்களில் இரண்டாமானவன். இவன் கி. மு. 100 முதல் கி. மு. 98 வரை வடஇலங்கையை ஆண்டான். இவன் தன் முந்தைய அரசனான புலாகதன் இடம் அமைச்சனாக இருந்து அவனையே கொன்று ஆட்சியை கைப்பற்றியது போல் இவனின் அமைச்சனாக இருந்த பாண்டியமாறன் இவனைக் கொன்று இவனுக்கு பின் ஆட்சிக் கட்டில் ஏறினான்.

**பாண்டியமாறன் (கி.மு. 98 - 91)**

பாண்டியமாறன் வடஇலங்கையை ஆண்ட ஐந்து பாண்டியர்களில் மூன்றாமானவன். இவன் கி. மு. 98 முதல் கி. மு. 91 வரை வடஇலங்கையை ஆண்டான். இவன் தன் முந்தைய அரசனான பாகியன் இடம் அமைச்சனாக இருந்து அவனையே கொன்று ஆட்சியை கைப்பற்றியது போல் இவனின் அமைச்சனாக இருந்த பழையமாறன் இவனைக் கொன்று இவனுக்கு பின் ஆட்சிக் கட்டில் ஏறினான்.

**பழையமாறன் (கி. மு. 91.- 90 )**

பழையமாறன் வடஇலங்கையை ஆண்ட ஐந்து பாண்டியர்களில் நான்காமானவன். இவன் கி. மு. 91 முதல் கி. மு. 90 வரை வடஇலங்கையை ஆண்டான். இவன் தன் முந்தைய அரசனான பாண்டியமாறன் இடம் அமைச்சனாக இருந்து அவனையே கொன்று ஆட்சியை கைப்பற்றியது போல் இவனின் அமைச்சனாக இருந்த தாட்டியன் இவனைக் கொன்று இவனுக்கு பின் ஆட்சிக் கட்டில் ஏறினான்.

**தாடிகன் (கி. மு. 90 - 89)**

தாட்டிகன் வடஇலங்கையை ஆண்ட ஐந்து பாண்டியர்களில் கடைசி மன்னனாவான். இவன் கி.மு. 90 முதல் கி. மு. 89 வரை வடஇலங்கையை ஆண்டான். இவன் தன் முந்தைய அரசனான பழையமாறன் இடம் அமைச்சனாக இருந்து அவனையே கொன்று ஆட்சியை கைப்பற்றினான். பிற்பாடு இவனோடு படை எடுத்து வந்த மற்ற ஆறு பாண்டியத் தளபதிகளும் சேர்ந்து முறியடித்த வலகம்பாகுவே இவனைக் கொன்று மீண்டும் வடஇலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றினான். பிற்பாடு வலகம்பாகு 12 ஆண்டுகள் வடஇலங்கயை ஆண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் மறுசீரமை...

மதியைப் பெற்றுக்கொள்ளும்போது எதிர்க்கட்சியும் சில குழுக்களும் நடந்து கொண்ட விதம் கவலையளித்துள்ளதாக வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்புகள் குறித்து எதிர்கருத்துகளை வெளியிடுபவர்கள் அதற்கான தீர்வுகளையும் முன் வைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு மாற்று வழிகளையோ தீர்வுகளையோ முன்வைக்காதவர்கள் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் பொது மக்களை ஏமாற்றுவதை நிறுத்த வேண்டும் எனவும் வஜிர அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## லிட்ரோ எரிவாயு...

கிராம் சிலிண்டரின் விலை 37 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய விலை இன்று முதல் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், விலை குறைக்கப்பட்டதன் மூலம் 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 2982 ரூபாயாகவும் 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1198 ரூபாயாகவும் 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 561 ரூபாயாகவும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நீதிமன்ற...

சேகரவை நீதவான் எச்சரித்தார்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில், மேலதிகமாக மேம்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றதா, என்பது தொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா நேற்று செவ்வாய்க்கிழமை களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது குருந்தூர்மலைப் பகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவும் வருகை தந்திருந்தார்.

இந்நிலையில் நீதிபதி ரி.சரவணராஜா குறித்த வழக்குத் தொடர்பிலான விசாரணைகளை, இரு தரப்பு சட்டத்தரணிகளுடனும் இணைந்து மேற்கொண்டிருந்தபோது இடையே குறுக்கிட்ட சரத் வீரசேகர, தன்னை அறிமுகப்படுத்தி தானும் அங்கு கருத்துத் தெரிவிக்க முற்பட்டார்.

அப்போது அவரது கருத்தினை ஏற்க மறுத்த நீதிபதி,

பாராளுமன்ற உறுப்பினர்களோ, அரசியல்வாதிகளோ இங்கு கருத்துத் தெரிவிக்கமுடியாது எனவும், இங்கு நீதிமன்ற விசாரணையே இடம்பெறுவதாகவும், அங்கிருந்து சரத் வீரசேகரவினை விலகிச் செல்லுமாறும் எச்சரித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து சரத் வீரசேகர அங்கிருந்து விலகிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## உணவுகளின்...

உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உணவு விலை குறைப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், உணவுப் பொருட்களின் விலையை குறைத்து அதனை கட்டாயம் காட்சிப்படுத்துமாறு வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இன்று முதல் இந்நாட்டில் குறைக்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளை நிச்சயம் அறிவிப்போம் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## குருந்தூர் ஆதி...

விக்கப்பட்டதற்கு அமைய, எதிர்வரும் 14ஆம் திகதி காலை 9.00 மணிக்கு குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் இருந்த இடத்தில் பொங்கல் வழிபாடு நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## குருந்தூரில்...

களவிஜயத்தினைத் தொடர்ந்து பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தினர் ஆகியோரது பதில் அறிக்கைக்காக குறித்த வழக்கானது எதிர்வரும் 08.08.2023ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது.

குருந்தூர்மலை தொடர்பாக வழக்கிலக்கம் AR/673/18இல் தொடரப்பட்டுள்ள வழக்கில், 12.06.2022இற்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதிமன்றம் 19.07.2022 அன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

எனினும், நீதிமன்றம் இவ்வாறு கட்டளை வழங்கிய பிற்பாடும், நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த 23.02.2023 அன்று குருந்தூர்மலைக்கு, தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயத்தின்போது இவ்வாறு நீதிமன்றத்தின் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் இவ்வாறு நீதிமன்றக் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் இடம்பெறுவது தொடர்பில் களவிஜயத்தில் ஈடுபட்டவர்களுள் ஒருவரான முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த 23.02.2023அன்றைய தினமே முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை அதனைத் தொடர்ந்து 02.03.2023அன்று முல்லைத்தீவு நீதிமன்றில் AR/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் அவ்வாறு குருந்தூர் மலையில் மேலதிகமாக மேம்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கு 04.07.2023 நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

குறித்த களவிஜயத்தின் போது குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற மேம்படுத்தல் வேலைகள் தொடர்பில் நீதிபதியால் ஆராயப்பட்டுள்ளது.

அதேவேளை பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களம் இது தொடர்பிலான பதில் அறிக்கை ஒன்றினை வழங்குவதற்காக எதிர்வரும் 08.08.2023ஆம் திகதிக்கு குறித்த வழக்கினை நீதிபதி திகதியிட்டுள்ளார்.

மேலும் நீதிபதி இவ்வாறு குருந்தூர் மலைக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்தபோது, அங்கு பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், தண்ணிமுறிப்பு மக்கள், குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்டவர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1620
வெற்றி இலக்கங்கள்
துலாம் 8 6 5 0 3 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.07.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1195
G 40 74 77 78
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.07.04
சீட்டிழுப்பு இலக்கம் 3407
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
E 31 33 56 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1513
வெற்றி இலக்கங்கள்
I 24 07 18 52 58

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.04
சீட்டிழுப்பு இலக்கம் 474
வெற்றி இலக்கங்கள்
மகரம் 01 13 31 49 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/04
சீட்டிழுப்பு இலக்கம் 5165
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
K 2 8 3 5 6 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2139
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.04
தினம் செவ்வாய்க்கிழமை
Y 01 29 39 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 3,522,540/-
DLB

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.07.04
வெற்றி வாரம் 4300
வர்ணம் பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,156,672.00
வெற்றி இலக்கங்கள்
12 30 66 73 F
DLB

சசிரி
வெற்றி வாரம் 345
சீட்டிழுப்பு திகதி 2023.07.04
வெற்றி இலக்கங்கள்
01 23 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,978,780/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,665,256.20
திகதி 2023-07-04
வெற்றி வாரம் 3851
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
22 45 51 56
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 9,515,200/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 35 03 05 22 39
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1315
திகதி 2023.07.04 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 343,076,480.60
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 1965
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.07.04
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 55,024,907.20
வெற்றி இலக்கங்கள்
30 39 48 72 W
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503

## வேலையாட்கள் தேவை

யாழில் பிரபல நகைக்கடைக்கு அனுபவம் வாய்ந்த விற்பனை பிரதிநிதிகள் தேவை.(ஆண்,பெண்)
யாழிலுள்ள ஸ்ரூடியோ ஒன்றிற்கு பிறேம் போடத் தெரிந்த வேலையாட்கள் தேவை. (16195)

077 773 0567

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777 (C-6889)

## STUDY, WORK LIVE IN CANADA

கனடாவில் உயர்கல்வி, வேலைவாய்ப்புகள், குடும்பத்துடன் நிரந்தர வதிவிடம், ஆலோசனைகள் - கருத்தரங்கு

09-07-2023 ஞாயிறு காலை - 11 மணி

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

முற்பதிவு அவசியம் 0777-068-777 (C-6889)

## பணியாளர்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள சுப்பர் மாக்கெட் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
- பொதி செய்பவர்கள்
- பொருட்களை Track இல் அடுக்குபவர்கள்

வயது எல்லை - 20 தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும்

(16181) 077 343 4174

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## NEW SCIENCE HALL
Kannathiddy Road, Jaffna.

2024 A/L ENGLISH MEDIUM

PHYSICS
Mr.R. RAAKULAN B.Sc.
Waves & Vibration

Mon, Wed & Fri - 6.00 Am
Starts on 07.07.2023 friday at 6.00 Am

Can get admissions from office (C-6867)

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர் :
தே. கலைத்தாசன் (கரன்)
021 315 5900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம். (16187)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை 150,000/= (ஒன்றரை இலட்சம்) ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16187)

076 826 0354, 076 057 0354


## கண்ணீரில் கரையும் ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 07 - 1974

மறைவு 15 - 07 - 2022

### அமரர் கலைமதி செல்லத்துரை (கணக்காளர்)

*BBA (Hons), Dip in Pub ADM, MA in Pub, LLB (Hons)*

(முன்னாள் கணக்காளர் வடமாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம், முன்னாள் போதனாசிரியர் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணம்)

திதி : 05.07.2023

எங்கள் குடும்பம் எனும் கோவிலிலே
ஒளி விளக்காய் இருந்தவளே!
ஆற்றல், விடாமுயற்சியின் மறுவடிவமே
எண்ணிய எண்ணங்களில் ஏற்றம் கண்டவளே!

வாழ்க்கை எனும் பாதையிலே – நாம்
பிரிந்து சென்ற வேளையிலும்
பாசம் எனும் பிணைப்பால் – எம்
எல்லோரையும் பிணைத்தவளே!

நேற்றும் போல் உள்ளது
உனை நாடி நாம் நாடு வந்தவேளை
எமையெல்லாம் பெருந்துயரில்
ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டாய்!

நித்தமும் உன் நினைவுகளால்
கண்கள் குளமாக நெஞ்சம் ரணமாக
பற்றின்றி நடைபிணமாக
வாழ்கின்றோம் – ஆனாலும்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

72/50, பனிக்கர் லேன்,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர் (16169)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 19 • 09 • 1986

மறைவு 25 • 05 • 2023

கடந்த 25.05.2023 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இராசதுரை சறூபன்

(ரஞ்சன் - பசுமை, மரக்கறி பழக்கடை உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 06.07.2023 வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் 08.07.2023 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு புத்தூர்,
077 403 2769

இங்ஙனம்:
குடும்பத்தினர் (16196)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.